பக்திரசக் கீர்த்தனை.

உ

சிவமயம்.

கலியுகக்காக்ஷியென்னும் கீள ஈரால்

கம்ப காமாக்ஷியம்பாள்மீது

பக்திரசக்கீர்த்தனை.

இஃது

பானுபுத்ரன் பாண்டவத் தலைவன்

மேலக்கோட்டையூர்

பா. ச. வே. சங்கரலிங்க தாஸரவர்களால்

இயற்றி

கீள ஈரால்

வே. போன்னுச்சாமி நாடாரவர்களின்

பொருளுதவியைக்கொண்டு


தூத்துக்குடி

அருணோதய அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

---

920. [அணா 4.



உ

ஹரி ஓம்:

சிவகாசி இந்து எலிமெண்டரி ஸ்கூல்

தலைமை உபாத்தியாயர்

சர்க்கரை புலவரவர்களால் இயற்றிய,

சாற்றுக்கவி.

காமாக்ஷி சகாயம்.

கஞ்சமலர்த்தடமலியின் கீழயீரால்
ஊரதனில் களிப்பாய் மேவி அஞ்சலி
செய் மெய்யடியார்க்கருள் தருணற்க்
காமாட்சியம்மாள் மீது விஞ்சிய
பாவலர் மகிழக்கீர்த்தனை செந்தமிழதனால்
விழங்கச் சொற்றான் வஞ்சியர்மேல்
நசையொருவும் சங்காலிங்கக்கவிஞன்வல்லான்மன்னே

கீழயீரால் ப. சி. பொன்னம்பல நாடாரவர்களால்

இயற்றிய சாற்றுக்கவி—வெண்பா.

சீர்தவழும் யீரால் செல்வி காமாக்ஷி தன்மேல்
பார்கமழும் மேற்கோட்டைப்பாவலனும்
தார்புகழும் சங்க லிங்கம் சாற்றிய நற்கீர்த்தனைகள்
எங்கும் மகிழ்தரப்பா எற்றினும்.

எட்டயபுரத்தைச்சார்ந்த சோழபுரம்

சி மா. அ. இ. ராமசாமிதாஸர் இயற்றியது.

எண்சீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்.

திருமடந்தையனுதினம் நிர்த்தனஞ்செய்மாடஞ்
சிறந்தொரு ஈரால் நன்னகரில் நாகச்
சிரமடந்தை யீஸ்ரீயும் அடியார்க்கருள் செய்யெங்கள்
தேவிகம்ப காமாட்சி மீது காயத்
திரிமடந்தையருள் பெருகீர்த்தனமாராய்ந்து
செப்பினான்மேற்கோட்டை நகரில்மேவும்
தருமடந்தைமடனூறும் வடிவில்மிக்க
சங்காலிங்கக் கவிஞன்றமிழ்ச் சிங்கமே

அட்டவணை.

பானுபுத்ரன்-பாண்டவதலவன் மேலக்கோட்டை ஊர் வரதப்பசங்கரலிங்கதாஸாவர்களால் இயற்றியது கலியுகக் காட்சியென்னும் கீழ ஈரால் கம்ப காமாட்சியம்பாள் மீது பக்திராஜக் கீர்த்தனை.

விளம்பரம்.

இதனுல் சகல வித்வசிகாமணிகளுக்கும் தெரிவிப்பது இந்தப்புஸ்தகத்தை வாசித்தோர் கேட்டோர் எக்குலத்தவரும் ராஜயோகத்தை யெய்துவர்.

விருத்தம் வெண்பா.

திருவளரும் கீழயீரால் செல்வி கம்ப காமாட்சி-பெரிகிநிழல் நின்ற வணம்பேசுவேன்-உருவரிந்து மேல்க்கோட்டை ஊரதனில் விஜயகவிநாயகனே-பால்த்தேட்டை தந்து யென்னைப்பார்.

அவையடக்கம் வெண்பா,

வெண்பாவை பாவாவிழம்பினேன்-வேதமுதல் நண்பான அன்பனுக்குனல் வரம்தா-கண்பார்த்து-மண்மேல்புவியாழ வைத்துன்பதி சேர-விண்மேல்ப்பு வியாழச் செய்விரைந்து

ஆசிரிய விருத்தம்

பராபரத்தில் அருவுருவாய் பரமன்தானு படைத்ததின்மேல் பச்சமுள்ள சிவமுமாகி-தராதலத்தில் சத்தியுள்ளே ஞுதவிந்தா தனிப்பொருளா சதாசிவமாமகேசுறத்தில் நிராகரித்தனுத்திரனில் விஸ்ட்ணுவாகி-நின்மலனு நிஸ்க்களமாபிர்மாதோன்றி சராசரத்தில் ஓங்காரமூலம்தன்னில் சற்குருவாம் கணபதி பொற்ருள் காப்பாமே.

ஆயசய்யா யென்ற மெட்டு

1 கணராசரகதி தநம் வல்லாசா கலிதீர்த்தெனையாள் யீசா முன்-கயிலையென ஔவையைக் ககன முறசெய்தா ஆ ஆ ஆ பின் காரணக்கிரிவல மாதாரணையாவுந்தா-பவ வினையைக்கொய்வா- யினியதவம் முய்வாய் கார்த்திடுவா- பூர்த்தியதா சேத்திரம் யிலங்கக் கணராசா.

2 ஆனைமுகத்தோனே- பொன்பானை வயத்தோனே-அல்லல் தீர்த்தெனையாள்கோனே-மெய் அன்பர்களுக்கன்பனாக நின்று ஆ ஆ ஆ-வெகுபண்புதருமென்றுவுனக்கின்று- அற்சனைகள்தானே-வுச்சிதமானானே மெச்சுவேலன் கோனே- இச்சணமே நிச்சயமா-பச்சமுடன் ரக்ஷிஞ் செதிற் கணராசா.

3 தந்தையை வலம் வந்த-மயில் கந்தனுக்குமுந்த-சாமியே உனைப்பணிந்தேன்-நிதம்- சாசுவத நிஸ்ட்டை புரிதேவே- ஆ ஆ ஆ- பதம் பாடிமகிழ்ந்தேனருள் செய்கோவே- துதிதோடிராக மாக வருள் பூவே- பாதம்பணிந்தேன் ஞானே- வரமருள் சீமானே- பரமனருள் கோனே-பதமலரை யிதமுடனே நிதம் பணிந்தேன் அருள் புரிவாய் கணராசா.

4 சத்திவுமைபாலா-சஙகரனருள் சீலா.தையல் வல்லபை லோலா-உன்னை பக்தியுடன் நத்தினேனே யானே ஆ ஆ ஆ பலே அத்திமுகாயென்னை எ நீ ஆதரிப்பாய் கோனே பாதம் பணிந்தேன் ஞானே வரமருள் சீமானே இதமுடன் பூமானே பதமலரை யிதமுடனே நிதம் பணிந்தேன்- அருள்புரிவாய் கணராசா.

5 ஊன் வினையை நீக்கி உந்தாளிணையை தேக்கி திருஒ ஆ ஊவென நோக்கி நீதிவுள்ளபடி வள்ளலடி கள்ளமின்றி பாடி ஆ ஆ ஆ சதிவிள்ள ரெடி நல்லசதிவல்லபதி நோக்கி-ஒன் பாதம் நம்பிநேனே-என் மீதன்புவை கோனே-வினை தீரென வென்றேனே பரிதிகுலம் வுருதியுடன் சுருதி சுடர் கதிர் சங்கரலிஙகம்-கணராசா

முருகன் துதி விருத்தம்.

சுந்தரம் மைந்தனே துதிக்கையன்தம்பியே துகள் நீக்கி வருமை போக்கி- சுடர்மயமா ஈரேளு வுலகுபயிரண்டமும் சூள்பொரி ஆராகசிவநின் விக்தையுடன் நெத்தியில்-வந்து சிவசத்திகை வேகமுடன் வந்தமர்ந்தா சந்ததம் சரவணையில் கந்தனை வந்தவா சண்முகானந்தக் கடவுளே.

ரகுபதி ஸ்ரீராகவனே எறன் மெட்டு.

1 முருகனே-சிவ குருபரா உன்னை கூவிதேடினேன் முருகனே. சிவகுரு

2 அறுமுகவனே என்முன்-வருகவெனத் துதித்தேன் அத்தியின்பின்னால் வஸ்துவானவா-னத்தும் அடியேனை முத்தி சேர்த்திடும் முருகனே சிவகுரு.

3 வேல்முனைக்கதிகாரா-விஞ்சை விமலப்பாதா வித்தைவேதனே கர்த்த நீதனே பக்திநெறி தனை இத் தினம் தரு முருகனே

4 கம்பையில்வடிவேலா-காரணஅடிலோலா நம்பும் சங்காலிங்கம்நாடிச் சரணடைந்தேன் முருகனே

முன் கலைமகள் துதிவிருத்தம்.

கற்றாலும் வுற்றகவி சொல்லவேணும்
கலைபலநூல் விற்றமை நெஞ்சில் தெரிபடவேணும்
விநாயகன்றன்— பொற்றாள் பணிய வரம் தாவேணும்
புகழ் நாவைவிட்டு சற்றாகிலும் சற்றே நீங்காத வாலே
சரஸ்பதியே.

தோடிராகம் பாடுவோள் இவள் என்ற மெட்டு

1 சரஸ்பதியே சரணம் செய்தேன் தர்க்காத்தருளுவா உந்தன்-தாழிணையைப்பணிந்தேன் வரம்தந்திடத் தாயே நீ வந்திடுவா-சந்ததம் வந்தனம் முந்தவே தந்தனன் தக்க பெரும்புகழே-தந்து—சங்காலிங்கம் தனிக்கவிச் சிங்கம் சரணடைந்தேன் இங்கு சாசாவென கதிர்கிரவயமென மதிதங்கும் தாமரையே த த சரஸ்பதி

திருமால் துதிவிருத்தம்.

மாறுமல் மாயனைவாழ்த்தவும் போற்றவும் வந்து நித் தம்-பாராதிருக்க மனம்வருமோ பஞ்சபாண்டவர்க்கே-மூராரிஸ்ரீ ஹரிகோபாலா உந்தனின் முகாண்மையினால் காராதிருந்தனையோ எனைக்காரும் காரும் கார்கிரனே

மாயனே இது ஞாயமா என்ற மெட்டு.

1 கோபாலா என்மேல் கோபமாகுழந்தையல்லவா கோ

2 நீவா கருடன்மீதேறி நின்தாளிணைபணிந்தேன் நான் கோரி முன்-மாபாரதம்முடிவல்ல அரிஎன்-வருத்தம் தீர் த்த ருள்மாயா நேயா ஸ்ரீ ஹரி கோ

3 துன்பமெனும் பவம் மூடி-அருள் துதி தெரியாமலே வாடி-நான் இன்பமாகவேதேடி இருபாதமே பணிந்தே ன்கோடி-இந்தமாமலைதனில் நீ இருக்கா மாதவந்தனை நான் துதித்திடக் கோ

4 சங்கரலிங்கம் பாட்டு தமிழ் ஓசை அன்புடன் கேட்டு துகள் என்வினையை விழத்தாட்டு யின்பயினிய ரசம்த னேஊட்டு இந்தப்பூமிதன்னிலே நான்படுந்துயர் சாமி யே என்ன நீ யறியாததா கோ

கம்பைகாமாக்ஷியம்மன் துதிவிருத்தம்.

காத்தானையீன்ற காமாக்ஷிபாதம் கபடமின்றி-பூத்தா ளில்வீழ்ந்து புலன் பொரி யாவையும் பொசுக்கிச் சுத்த நீத்தானே-வாலசின்னயும் உன்னேயும் மற்ற யாவரையும் போற்று தவர்க்குண்டோ பிரமானந்த பேரின்பமே.

அம்மா மதுரை மீனாட்சி என்ற மெட்டு.

1 காட்சியிலங்குங் காமாட்சி உன் காலடி பணியாட்சி பேட்சி-கார்பிரான் தங்கையாட்சி களங்கமில்லாதாட்சி க க காட்சி

2 உந்தன் சூட்சி அறிந்துவரம்கொண்டேன்-கம்பை சூழும் தெய்வம் விண்டேன் கண்டேன் சூன்யம் தீரு வென்றேன் சுடரொளியில் நின்றேன் சு சு காட்சி

3 அம்மா வாதுசெய்யாது வாம்தாரா-உந்தன் மகிமை தந்தென் சேரா வாரா வாழ்பதியின் சோரா-வந்தென் முகம் பாரா வ வ காட்சி

4 தமிழ் சங்கரலிங்கம் மகிழ்ந்தேற்றி-இதில் சாயுச்ய பதம் சாற்றி போற்றி சரணடைந்தேன் வெற்றி--தமிழ் மறையைச்சாற்றி த த காட்சி

ஷை அம்பாள் விருத்தம்.

தில்லைவணம்கார்த்து திருமகனைசேர்த்துதிரு நடனம் ஆடும் காமாட்சி-வல் வினையைத் தீர்த்து வாலசின்னேச் சேர்த்து வனங்கார்த்த உந்தனின் மாட்சி யெல்லையினில் கீழ நால்நகர் நூலையெளியனால் கூறும் இப்பேக்ஷிவல் லமுத்துகாத்தான் நல்லனென யார்த்தான் வரம் தருவா யிதுவேசூட்சி.

சோமசேகரனருளும் என்ற மெட்டு.

1 காஞ்சிவனம் காத்தமுத்துக்காத்தான் காத்தான் முன் காரினை ஆரியமாலே கைகோர்த்தான் கோர்த்தான் கா

2 பூஞ்சிருவனங்களிலே யார்த்தான் யார்த்தான் பரும் பூதத்துணையாக ஒன்றை சேர்த்தான் சேர்த்தான் கா

3 வாலியின்னைதம்பி எனக்கொண்டான் கொண்டான்
அவன் ஆஸ்பதியை நம்பிஉயர் விண்டேன் விண்டேன்
கா

4 நீதியுண்டு நிதியு முண்டு தெய்வம் தெய்வம் இதில்
நிச்சயமுண்டு மகிழ் செய்வம் செய்வம் கா

5 தொட்டியச்சின்னான் எவர்க்கும் தீரன் தீரன் பா
ரின் தொல்லுலகாள் கம்பையூர்க்கு வீரன் வீரன் கா

6 மால்பாதத்தைப் போற்றும் கார்த்த சிங்கம் சிங்கம்
அவன் மாதர்வை பணியும் சங்கரலிங்கம் லிங்கம் க

அம்பிகா உன் மகன் குகன் என்ற மெட்டு.

1 கம்பகாமாட்சி உன் சுதன்-நம்பிப் பூங்களுக் கிசைக்
தவன் கம்ப

2 அண்டினோர் தன்னைக் காத்தான் ஆ அண்டினோர்
தன்னைக்காத்தான்-ஆரியமாலை பெண்ணைச் சேர்த்தான்
முண்டினவன் தன்னைத் தூர்த்தான் ஓ மூ மூர்க்கமின்றி
யார்க்கும் நல்பிரான் கா

3 ஒட்டான் வேடம் போட்டுக்கொண்டான் ஆ ஒ ஓரி
த்தோலிபோற்றிச்சென்றான் மட்டான செங்கமலத்தை
கண்டான் ஓ ம வார்த்தை நீற்றை சேற்றணிந்தவன் கா

4 தேனங்கமழ் கீழுசால் சங்கம் ஆதே திருமதில் நீளப்
போால்ப்பொங்கம் பூங்கமழ் கம்பைகாத்தலிங்கம் ஓ பூ
பொன்னடிபோற்றும் சங்கரலிங்கம் க

இசைந்த வரும் கரியுரி என்ற மெட்டு.

1 கோவிலும் சிகரம் வாய்ந்ததோர் அழகைக்குரியாக
இந்தக்குவலயம் புகழ நவமணிமேடைவெகுசீரே கோ

2 கம்பையின் பாதம் நம்பிய நீதம் பணிவேனே அம்
மை காகமிலங்கிய விரதம் துலங்கிடதுணிவேனே கோ

3 காத்தவாராய சுவாமியின் மகுடம் வெகு சீரே அதை
கண்டு மகிழ்ந்து விண்டு துணிந்து தெரிவீரே கோ

4 காவலின்றானின் பாவையதே அதி சோக்கே அவன்
மேல அன்போடனுகூலமா நினைவாரருள்வாக்கே கோ

5 வாடசன்றசி மேடையை யோசி விடுகாதே கண்
மூடயில் வாசி நாசியில் தேருணடுவாசல் கோ

6 சங்கரலிங்கம் தனிக்கவிச்சிங்கம்கவிபாரு கவி சர்க்
கரை புலவர் இக்கணம் வலவர் புவி சீரு தோ

பகாரியாலா என்ற மெட்டு.

1 வாலசின்னு வாம் தந்திடுயின்னுள் வா

2 நீலப்புவிமண்டுளாடும் நித்தன்பாதம் போற்றியே-
கோலத்தேவி ஆரியமாலையின் குடிதனைனத்தியே-சோ
லைக்குள் துயின்ற காத்தான் துணை கொண்டவா பூதத்
தோளில் நின்றவா-சுத்தக்கநத்தாள்ள மெத்தவிருத்தனு
புத்தன்காத்தானுக்கா வித்தைபாடுர்தம்பி வா

3 திண்டினர் சேவை புரியும் எண்டிசையும் போற்றவே
மண்டுளாடும் மணியைப்போற்றி உந்தன் காதை சாற்
றவே பண்டுவினையைப் போக்கி என்னைப்பாது கார்ப்
பாய் உந்தன் சேவை சேர்ப்பா-ராமர்க்கு பகாரிலச்மண
னைப்போல்-பூமன் காத்தானுக்குபுண்யவானும்தம்பிவா

4 ருத்திரபூமிதனிலே முத்திதரும் தெய்வம் நீ-பத்திர
புஷ்பவகையில் பக்தி அர்ச்சனைபுரி சித்தமுள்ள காத்த
ஸ்வாமி சேவைதந்தவா ரிஷட்டை யோகங்கண்டவா
திடமுள்ள மனன் சுடரொளியினன் விடமெனச்சீரும்
வேகமுள்ள தம்பி வா

5 அங்குமிங்கும் எங்கும் ஒன்ருய் ஆடும் பிர்ம ஆண்ட
வன் சங்கும்முழங்கும் கம்பைவிழங்கும் நீடுபுகழைவேண்
டினன் பங்கும் தந்து பாதுகார்த்து பாலனைக்கார்ப்பாய்
வாலசீலனே எற்பா பவமகற்றியே சிவமுயற்றுவா-பக்
தனைக்கார்த்து பதமருள் வா தம்பி வா

6 பங்கம் வந்திடாமல் கார்க்கப்பாவினம்மியற்றினேன்
வுங்கள் துரைகாத்தஸ்வாமியை எங்கதென்றும் போற்
றினேன்-சங்கடம் தவித்து என்னைத்தற்பரா கார்ப்பா
யிசை இப்போதே சேர்ப்பாய் காவலன் சங்காலிங்கம்
மகிழ்ந்தேற்றி கேவலம் வந்திடாக் கிருபை தாதா
தம்பி வா

விதுவென்ன பரிதாபம் என்ற மெட்டு

1 தில்லைவனம்பவுசே உந்தன் திருநடனம் சொகுசே
ஆ ஆ தில்லை

2 முல்லைமுகன் முருவன் முற்றென்றிவை பிதற்று
கல்லாப்புன்மாக்கள் என்னைக்கவற்றவிடுவேனோ எல்
லோருங்காணபுரங்காட்டுதிர்துக்க பல்லெலன்பு கண்
ணொடொழுகுவேன் ஆ ஆ தில்லை

3 பொல்லாத மூர்க்கருக்கெத்தனை போதிக்கினும் நல்
லார்க்குண்டான குணம் நாடுமோ தினம்-தொல்லுல
க மாதாவே தாத்தனம் நீதரவே-வல்பிணிதனையகற்றும்
மாநாகம் பையின் தில்லை

4 ஞானநெறிவழியே நீனயிடர் தணியஞடிப் பதமல
ரில் வாடினேனே மோனவட்டங்கொடுத்து முடிதனை
சிரம் எற்றி பானத்தை தந்சருள்வா பாலன் பாடலில்
தில்லை

5 பஞ்சகர்த்தாக்கள் அய்ந்து பய்யுள் நிறைந்து என்னை
பணிய ஒட்டாமலே பற்றியதே வஞ்சகமனம் தன்னை
மாற்றி எனக்கருளும் சஞ்சலம தீர்த்திடச் செய்தாயின்
கம்பையின் தில்லை

6 வுருஒளிநின நடு பெருவெளி சிவனடி ஓடிப்பணிந்
து உன்னைத் தேடினேனே
திருவிழி அருள் தங்கும் சேயன் சஙகாலிஙகம் வரு
வினை தனையகற்றும் வனப்பூஙகாவின் தில்லை வனம்
பவுசே.

அண்டர்பணியும் என்றமெட்டு.

1 கையில் வாழ்கொண்டு நிற்கும் கருப்பணனே-மெய்
யில்வாழ் இன்றும் என்றும் விருப்புடனே-காரணவீர
தண்டை நீரணி நெத்திமண்டை-தாரணி சுத்தங் குண்
டம் கருப்பணனே கையில்

2 முச்சுடர் ஒன்றைப்போற்றும் முன்னோடியுக் நீ-கச்
சைபணிந்து தோற்றும் கருப்பணன் நீ பத்திப்பணிந்து
கண்டேன் சுத்திக்கிரிந்து விண்டேன்-னத்தி ஒன்பா
தம் கொண்டேன் னழினதிடக் கையின்

3 தில்லையின் கம்பை காத்த திருவுளமே னல்லவன்வம்
பை தீர்ணரு மணமே சித்தியருள் செய்தேவா- யித்தி
னம் என்னைகாவா-முத்தியில் என்னைச் சேர்வாமுதல்
தெய்வமே- கையில்வாள்கொ.

4 கங்கணம்கட்டி ஆடும் கருப்பணனே சிங்கலை ஓட்டித்
தேடும் சிறப்புடனே காரிகை சுங்காலிங்கம் பேரிகை

எங்களின் சிங்கம் சூரியமங்கள சிங்கம் புரபலனைனே

புத்திமடித்தவனே என்ற மெட்டு.

1 முத்தமிள் வித்தகியே- கம்பை யித்தினம் சத்திநீயே உந்தன் னத்து புல்லாக்கு மூக்குத்தி பழிரென முத்திப்பல்லாக்குற்ற மூதண்டாகாரணி முத்

2 தாசாவடம்பூவணியுப-மகிள் தண்டை சிலம்புடயாள் மகன் தான் பணிந்திட- வான் புகழ்ந்திட நான்கனிக் கிட நீ யிருந்திடு முத்தமிழ்,

3 பூவனம் காத்தவளே-கம்பை புண்ணிய நீற்றவளே முன் ஆவினைமேய்த்த அரியின் தங்கை எனச் சோபன மாக துதிக்கும் அடியார்க்கு. முத்தமிழ்.

4 சங்கரலிங்கம் நானே உன்னைத் தான் பணிந்திட் டேனே-சுடர்-தங்கும்படியருள்-பொங்கும்படிகொடு சங் கரித்துங்கவிழ்-எங்கும் புகழ்ந்திடும் மு.

குன்றுருமுகனே என்ற மெட்டு.

1 காமாட்சி மகனே-கண் பாருயிங்கனே கம்பை கா

2 காமாட்சி மகனே- மிடி- போச்சுசுதனே கம்பை (காமாட்சி.

3 வாலசின்னனின்னேசா வருமையைத்தீர்விஸ்வேசா சீலம் யின்னமும் பேசா- திருநீரணியும் யீசா காமாட்சி

4 ஆரியமாலை மோகா-அந்தரிபாலயோகா சூரியதாலே நீகா குஞ்சிதபாதம் வாகா கொடுதிட.வாமுடன் சடுதி யில் அனுதினம் சங்கரலிங்கம் கவிபொஙகம் பெருகும் கம்பை காமாட்சி மகனே

வாவா கசமுகனே நீயென்ற மெட்டு.

1 காவா கருப்பசுவாமியே- கஙகணம் கட்டி நீவாவிருப் பனேமியே காவா.

2 காவா கருப்டசுவாமி கெயில் வாழ்கொண்டவாமி தேவாதருக்கன் நேமி சிந்தை ஈாலின் பூமி தித்தித் தோம் நிர்த்தனம் ஆடும்-பத்திக்கோகர்த்தனை நாடும் கா

3 மதிகெட்டு மிடியிட்டு பதினெட்டு படிதொட்டு கெதிவிட்டு சுதினட்டும் நிதிகட்டும்படி செய்யவருமை நீக்கியே அரிவுதேக்கியேபொருமை தாக்கியே அருமை யாக்கிட காவா

4 பூசை யபிசேகம் கொண்ட புன்னவனச்சோலை நின்ற ஓசை புவியாவும் கண்ட ஓமென்றச்சாம்விண்ட ஓதிய சங்காலிங்கம் பூதியை விழுங்க எங்கும் காவா

தேவாதி தேவ செயவல்லவா என்ற மெட்டு.

1 வானவர் போற்றும் வயிரவனே-வந்து-வண்மையைக் கார்ந்து வுயிருடனே மோனமே சேர்த்து முறையுடனே உந்தன் முத்திகொடுத்தென்னை யாள்பானே வா

2 தோத்திரம் செய்தேன் என் பாத்திபனே சுடர்-மாத்திரம் மெய்த்தவச்சித்துடனே-பாத்திரம் ஓங்கப்பவுசோங்க-நின்-பக்தன்புகழும் படர்ந்தோங்க வா

3 காரணகம்பையில் வாள்பவனே-கிரிடிகாண்டீபன் எந்தும் ஈசன் சுதனே நீரணி நெத்திரில முச்சுடரின்-நீங்காதநிஸ்டை நிரவயமே வானவர்

5 பக்கவின் சோபனம் கண்டுகொண்டேன்-வாலின் குக்கலின் வாகனம் விண்டு நின்றேன்-சற்சரை மாபலா கொண்டு சென்றேன்-தமிழ் சங்காலிங்கமும் தொண்டு யின்றே வா

கர்தா உன் பாதாரவிந்தம் பணிந்திடு எந்தனை காக்க

நீவாராயோ என்ற மெட்டு.

1 அக்குமணி பூண்ட சுக்கில அய்யனே ஆதாவ என்னைக்காருமே-பக்குவமா எந்தன் பாடல்க்கருள் புரி எகுலத்தோருன் இருபாதம் போற்றுவார் ஈசா ஈசா அக்குமணி.

2 பரமசிவனைப்பணிந்து வரமென்று பக்குவத்தூண்டு மகா முனிவன் திரணவரம் பெற்று சிவனைத்தொடவென்று-காணம் பதரியே காவில்தனில் சென்ற ஈசா ஈசா அக்குமணி

3 காவில் ஈசன் தன்னைக்காக்கவேணும் என்று கார் வண்ணன் மோகினிருபங் கொண்டே-பூவில்மறைந்த புதுமைகண்டு மாயன்- பேயன் தூண்டுவனும் பின்னை மாறுஞ் வாரும் ஈசா ஈசா அக்குமணி.

4 வாவென்றழைத்தனம்மாதவ வேடத்தை மாரிகாட்டவென்றீசன்படிக்க மோகினியாகி முன்வந்து நின்ற பெண்ணை முற்கத்தனமாகி கோக்கிப்பின்னே யேகும் ஈசா ஈசா அக்குமணி

5 பூசனைசெய்து யான் புஸ்பபத்தை தொய்து உன் புண்ய பாதமலர் சேவடிக்கே—பாசனைகண்டு நின் பாவ னைவிண்டுபாலன் சஙகரலிஙகம் பாடல்கிசைந்திடும் ஈசா ஈசா அக்குமணி.

பியாரத்தோரே மைந்தோனே என்ற மெட்டு.

1 காத்தலிஙகசுவாமி பாதம் போற்றி வாழ்குவோம் கம்பை காத்தலி.

2 நீற்றணிந்திடும் நேசவல்லவன் பூர்த்தி பூர்த்தி ஹும் பணிந்திடவே துணிஓம் கா.

3 முத்தியில்ச் சிறந்த சித்தியுள்ள வல்லதெய்வீகமே டா தம் பத்திப்பணிந்து பரகதி பெற்றிட பாராய் பாராய் பாவந்தீர்ந்திடப்பார் நலமே கா.

4 சஙகரலிஙகக்கவிஞன் சாற்றும் தேய்வமே மெய்ச்சர ண் அடைந்திட்டால் வறுமை போகுமே சம்போ சம் போ கம்பை மகன் சற்சனநேசன் கா.

இன்னம் சாலமா சிவ சரவணபவா என்ற மெட்டு

1 புன்னைப்பூவனமே கம்பை புன்னை

2 புங்கவர்பணி னம்திருகம்பை பு.

3 பூராஉந்தனை நம்பினேன் வாராதிருந்திட ஞாயமோ தீராவினை தீர்த்திடும் கம்பை பு.

4 சுடரொழி திமிதிமிதிமியென நடமிடு கிணுகிணு கிணு கம்பை பு.

5 கொன்றையணிந்திடும் குடிஅரசு மலைமகளின் நந்த ன்வனப்பவுசைஞத ஆதிசேடனும் புகலத்தரமில யெ னச்சொல னவிலப்புகுந்திட அருள்கொடு அயிச்சந்தண யிருவாச்சியும் குயில்பந்தன ஒயில்பேஸ் கம்பை பு.

6 சஙகரலிஙகமும் எங்கும் புகழ்பெற நிதம்பணி சிங்க மே கம்பை அங்கமே வனதடியர் பஙகமில்லாதவம்தேவே மங்களமான வரந்தா இஙகென்க்கோர் மொழியாகிலும் பங்கினில் நீ வரவே கம்பை பு

மாயனே யிது ஞாயமாயென்ற மெட்டு.

1 காத்தவராயனைப்போற்றுவோம் கடத்தேற்றுவார் கம் பை கா.

2 மாற்றரிய பசும்பொன்னே திருமால் மருகனெனும்
மன்னே யுயர்மாது ஆரியமாலையைச் சிறை மாயச்சூதி
னால் வாரிவர்த்தவன் கா.

3 சோடசவுபசாரமா தொழுதிடனவனே பாடவேவரம்
தருகுவார் அவர் பாதமே நம்பிவுருகினால் நீடிடும் புகழ்
ழ் வாடிடாமலே நித்தநித்தமும் கர்த்தனைப்பணி கா.

4 மாதவ சங்காலிங்கம் காஞ்சி வனத்தின் பெருமை
யே பொங்கம் சுடர்த்தேன் கமள் இல்லை எங்கும் திரு
சீர்ச்சிபெரும்புகழே தங்கும் கவிச் சிங்கம் கூறினேன்
பங்கமின்றியே எங்கும் மேன்மையாத் தங்கு வுலகினில்
கா.

விருத்தம்.

அன்னையே யுனதுபாதம் அடியேனும் போற்றி நீதம்
யின்னிலம் புகழும் கம்பை யெனறதால் யானும் தேடி
வுன்னியுன் தாளைப்பாடி வுருகியே அருளைக்கூடி
சின்னவன் வாலசின்னான் செயல் வேண்டிப்பாடுகின்
றேன்.

வாகாவா வென்றாலும் தேவாநீவாராது வம்சக் குரிப்
பல்லவா வென்ற மெட்டு.

1 வாராதிருந்திடா வாலசின்னுதம்பி வந்து டெனை
க்காருமே-கூருமே-வந்து எனைக்காருமே- நீ வாரா
திருப்பதுபாரோர்மதிப்பில்லாவண்யாவுண்மையதே வா

2 காவனம் காத்தவன் பூவனம் நீத்தவன் கம்பை சுதன்
தோழனே- பாலனே கம்பை சுதன் தோழனே என்னை
காராவிடிலுன்னை- லோசாவிடேன்- என்னைக்காப்பது
உன் கடனே திடனே காப்பது உன் கடனே வா

3 துஸ் - சங்காரனே இஸ்ட சிங்காரனே துக்கமிதக்த
வனே மருத்தனே து என்னை தூசித்திடாமலே நேசி
த்துக் காக்கத்துரையே மறை ஓதினேன் கூடினேன்
துரையே மறை ஓதினேன் வா

4 உன்னைக் கதியென்று நம்பு அடியேனை ஒப்பி வாம்
கருவா திருவா ஓ கன்னச்சங்காலிங்கம் தன்னைக் காக்
கக் கடன் கட்டழகா வருவா குருவா கட்டழகா வருவா
வாரா திருந்திடாவாலசின்னு

மயிலேவடி வேலனே டெதின் வா என்ற மெட்டு.

1 சித்திரப்பூதமீதிலேரி என் முன் வாரா சி

2 விஸ்த்திரத்தோளா- விமலையின்பாலா வுத்திரமான சொல்த்திரமாவனுகூலா சி

3 அந்தரிபாலா அருமறை நூலா ஆகமம் சொல்லும் ஆரியமாலையின் நேசா சி

4 புன்னவனப் பொங்கம் புஸ்ப்பவனச்சிங்கம் மன்ன வனென வாழ்த்திடு சங்காலிங்கம் சி

செந்தாழம்பூவென்ற மெட்டு.

1 எந்தாய் கம்பை பாதம் போற்றி இங்கீதக்கவிபாடி னேன் எந்தாய்

2 வந்தாளும் ஈஸ்பரியே வாமனன் சகோதரியே வாத்தியமுளக்கும் சேத்திர ஒலிக்கும் நேத்திரம் சொலிக்கும் பூத்தினம் மணக்கும் எந்தாய் ஆயிதாயி சேயன் உன்பாதம் ஆடினேன் கவி பாடினேன் மாயன் தங்கியும் நீயே வரும்வினை தீரும் நோயை வந்தனுகாமலே சிந்தையாய்யாமலே சுந்தரியே வரம் எந்தனுக்கு தாரும் எ

4 வாரந்தோரும் வெள்ளி சுக்ரவாரமே சுடர்த்திரமே சிராவுனகுடி மாராவாழ் வெய்தப்பிடி சிங்காரச் சங்காலிங்கம் கவிபாடி மங்காத பங்கினில் தங்கும் புவினுடி. எந்தாய்

அலங்காரம் என்ன சொல்வேன் என்ற ஓரடி சந்த மெட்டு.

1 பூங்காவனப்பெருமை புகல்வேன் இந்த பூதலம் தாங்கும் ஆதிசேடன் சொல்லத்தருமோ, பூங்கா

2 ஓங்கார ஆண்டவன் பவுசும் கணபதியும் பாங்கான கம்பை அம்மை ஒயிலும் பதிவைகுண்ட சாங்கோபசான்ற அரிபயிலும் சச்சிதானந்த சரவண அருமுகனின் திடமும் கெர்ச்சனை புரியும் வாமுள்ளபரி அய்யனின் இடமும் பதினெண்படியும் கரியகிரத்துடனே துரிய சிரத்துடனே மீழும் கருப்பெனவே கசசை கங்கணம் இஷ்டகுருராமீசைவாளும் சுத்திப்பீடமும் காத்தவராயனே சேர்த்தவன் ஆரியமாலை வாலசின்னனின் மட்டிலாவயிரவன் தொட்டியச் சின்னன் மதனை பெண் தெய்வம் சொல்வேன் பேச்சி ராக்காயி சாச்சி உகந்தாயி காச்சி தருகுமகிழ் கண்டேன் இன்னமும் சில சூக்ஷ மூக்காயி மூச்சி கார்தாயி தேற்சி திருவுருவம் விண்டேன் பொஸ்

பவகையில் மல்லிகை முல்லை அல்லி அசோகுபிச்சி மருக்கொழுந்து பஸ்ட்டு பாரிசாதம் பவழமல்லியுடந் கொடிமல்லிகையும் அந்திமல்லியுடன் சந்திரகாந்தி அடுக்குமல்லிகை தடுக்கு வெண்காந்தி அரளி சூதப்பு அற்புதந் தாமரை சூரியகாந்தி சுகந்த ரோசா இன்னும் அனேக புஷ்பம் இருக்குதிந்தவனத்தின் பூங்கா

காருண்யனே என்ற மெட்டு.

1 மாதரினமே ஆரியமாலை வழர்வணமே மா
2 மாதரினமே சுடர் தேஸஸ் முனமேசிலை மா
3 அம்மா நீ என்னைக்காரு அடியவன் முகம்பாரு
சும்மா இருந்திடாதே சுதன் வருந்தும்பிப்போதே
மா
4 தொகையறு.

தேனே வடிவே செந்திருவமுதே செஞ்சுடரோ நீன் கரும்பே உன்னை நானே தொழுது அடியடியாக ணண்ணியே எண்ணினேன் நாவகற்றும் கோனேயிவனென வாழ்த்தி வரங்கொடு கூவுசம்பு வானோர்புகள் சங்கா லிஙகம் வாக்குக்கருள் மாமணியே மாதரினமே

ஐய்யாபழனிமலை வெலா என்ற மெட்டு.

1 அம்மா ஆரியமாலைத்தாயே என்னை ஆதரித்தாண்டருள் நீயே சிம்மாசனமேதருவாயே உன்னை துதித்திட வாங் கொடுப்பாயே அம்மா

2 மாதர்மக்கள் மீதிலாசை விட்டேன் உந்தன்-மாமலரடிதனைத் தோட்டேன் நாசு-பூசை அபிசேகமாய்க் கும்பிட்டேன்-எந்தன் -புத்தியில் அறிந்துவழிப்பட்டேன் அ.

3 பூரா எனக்கு வரம்தருவா எந்தன் புந்தி மகிழ்வாவே வருவா-பாடல் சீராவுரைத்திட வருமா-வந்து-க்ஷேமம் தருவா குலகுருவா அ.

வேதியர்களுக் காசியாளே-ஞன்-வேண்டி துதித்தேனே இக்காலே-சாதிப்பிரம குலத்தாளே தமிழ்-சஙகாலிஙகம் பணிவேளே அ.

வேலாவா என்னையாழா இந்தருணம் என்ற மெட்டு.

1 ஆண்டவா பெரியாண்டவா உன்னை வேண்டி பணிந்தேனே ஆ.

2 தாண்டவம் புரியீசன் தவமகிமையில் நேசன்-தக்கன் தனைச்சிதா தக்கன் தனைச்சிதா-மிக்க வரமேகொடுத்த-ஆ

3 சுடரொளி மயமே-சுந்தரனமே திடவரமதுபுரி-தி-தேசோமயானந்த ஆ,

4 நித்யசொரூபா-நின்மலா காவா எத்திசையும் நிறைந்த-எ-வகா யோகா-நீ காவையா ஆ.

5 ஆதிபராபரா அயில நிராதரா அன்பன் சஙகரலிஙகம்-அ-அடி பணிந்தேற்றினேன் ஆ.

பழனியாண்டவனே யென்ற மெட்டு.

1 கம்பை காத்தவனே-வுன திரு-கழலிணைபணிந்திட விரைவினில் வாஙது கொடுவென மனதினில்-காவலன் சங்கரலிகங்மும் வாவென எஙகளின் பூவன க.

2 பம்பம்பம்மென வாத்தியமுளஙக பஜனைசெய்கிற பக்தர்கள் துலஙக சம்சம்சம்மென தாள ஒலியிலஙக தையல்க்காசியின் மகபதி-வையச் சுதியொடு நிதம்துதி-தாம் தாம்தாம்மென மத்தாளம்-தோம்தோம்தோம்மெனகைத்தாளம்-தாதியர் வீணை மிரட்டிட-பாதிரி பூவணை எய்திடத்-தஙகித்தொஙகி சித்திய-பொஙகித்தேன் கமழ் பூவன க-

3 மந்திரமோதியமறையோர் மகளான மஙகைமாலையமைமாய் கையில் வந்தித்த சிந்தனையாகத்தினம் துதி செய்திட்டேன் தேவா நீ வா காவா யூகா வாகா சீகா சிந்தையில் வந்தெனக் கருள்கொடு எந்தனின் நிந்தனை போக்கிடு சித்திரத்திரத்தில் வைந்த கம்பம் விஸ்திரத்திலனைத்த வின்பம் தேவியின் ஆலயம் மகிளூர ஆவியுன்மாலய பூவனக் கம்பைகாத்தவனே.

4 முந்கியிலஙகிய சந்திவிகாயகர் முக்கண்ணன் தோன்றிய இப்பிரணவத்துடன் பந்தி ஐம்பத்தொன்றுக நிரைந்[illegible] பூஜை மேடு நீரதிலே வாரபேர் மனமதிலே பக்கம் சரால் [illegible]ம்பை நதி மிக்க திகபோல் நிதி பார்புகள் [illegible] நெறிவழி யோர் விழிசுத்தி அறிகிய பம்பை தம்பையின் தேமன இனம்பம்தாஙகிய பூவன க

பாலாபிசேக பழனிமலையப்பன் என்ற மெட்டு

1 தேனபி சேகதிருவடி கம்பைதித்திக்கும் திங்கத் திகட்டாதெனதேன் தே

2 மானானசேனாபதி தானான கோனானவள் வானா
னதே மேனானகான் வானாம் தீனானபான் மேவும் ஊனா
தெயிருக்கும் வேனானதே திரைகரிபரியுடன் அரசுரவாக்
குலகளைதிரை பிணியர விரைவினில் போக்கும் தேவி
ஓங்காரி காவிலாங்காரி மாயன் சகோதரிவாள் வனமே
தேனாபி

3 அந்தரி சுந்தரி வாசதென்னை யாதரி அம்பிகை கம்பை
யை நம்பினேன் யான் ஆசாபாசம் விட்டாடிட நீ மெய்
கூசாவரங்கள் கொடுத்திடும் தாய் கை குறையுடன் வரு
மையின் தரித்திரம் நீக் அரன்மனை ஆசனம் பெரித்திட
தாக்கு குவலயம் போற்ற கவலையைமாற்ற குஞ்சா மீதி
னில் மைந்தன் ஆரோகணை தேனாபி

3 தாயைப்பணிந்து தடைபடவாகுமா சந்ததம் வந்தனம்
உந்தனுக்கே-நீயே கதி என் ஆயே யீன்றதாயே-சேயன்
தமிழ் நாயேன் உரையாயேனன்-நிதமுன திருமலரடி
பணிவேனே-பதிமனைவுருபில கொடிகொடுதேனே-நிச்
சயம் சிங்காசனங்கொடு உந்தனைப் பட்சமாய் பாதம்
பணிந்திடும் மைந்தன்யான் தே.

4 தேன்கமழ் சீழ்நீரால் வாழ் தேவியே தேசம் அம்
பத்தார் நிரையுடனே வாழ்பதி காவலன் நான் கதியா
கிட வானோர் மெச்ச-புன் துதிதாவிட மேன்புகழாகிய
புவியோர் பச்ச-பூவலந்திடிட வாமது தருவா-சிரசினி
ல் மணிமுடி சூடிடவருவா-புத்திரன் சங்கரலிங்கமும்
பாடினேன்-சத்தியே மங்களமாகவே நாடினேன் தே.

முற்றிற்று.



அருணோதயம் பிரஸ், தெற்குராஜதெரு, தூத்துக்குடி.

விளம்பரம்.



இதனுல் சகல கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் குருசாமிகோட்டையூர் அடுத்த மேலக்கோட்டையூர் பா. ச. வே. சங்கரலிங்க தாடாராலியற்றிய கீழஈரால் கம்பை காமாக்ஷியம்பாள் மீது கலியுகக் காக்ஷியென்னும் பக்திரசக் கீர்த்தனை முதற்பாகம் பாடி அச்சிட்டிருக்கிறது. ஷை இரண்டாம் பாகம், மூன்ரும் பாகம், நான்காவது பாகம் வரை பாடி அச்சிட்டு வெளிவரும். இத்துடன் காமாக்ஷியம்மன் பாடல் ஒன்று கீழஈராலுக்கும், மேலக்கோட்டையூருக்கும் இரண்டு புஸ்தகங்களாக பாடி அச்சிட்டிருக்கிறது. இத்தப்பாடலை யாதா ஒருவர் ஐயமின்றி மெட்டைக்கவனித்துப் படிப்பார்களோ இம்மையில் வித்வ சிரோண்மணிகளாகி கீர்த்திபெற்று மறுமையில் ராஜயோகத்தையெய்தி முடிவில் சாயுச்யம் பெறுவார்கள்.

இப்படிக்கு
வேல்ஸ்மித்திரன்
உயர்பானு தேவபுத்ரன்
பா. ச. வே. சங்கரலிங்க தாஸன்.

